**39 மாமனாக வந்து வழக்குரைத்த படலம்**

மதுரையம் பதியில் குபேரனைப் போல செல்வமுடைய தனபதி என்ற வணிகனுக்கு குழந்தை இல்லாத்தால் தன் தங்கையின் மகனையே தன் மகனாக ஏற்றுக் கொண்டான். தன் பிள்ளையை தத்து தந்த தங்கையிடம் நன்றி பாராட்டாத தனபதி தன் மனையின் தூண்டுதலால் தங்கையிடம் சதா சண்டையிட்டு வந்தான். தன் மகனால் இம்மை, மறுமைப் பயனை அடையும் தன் அண்ணுக்கு ஏன் இத்தனைச் செருக்கு என தன் அண்ணை ஏசினாள் அவனது சகோதரி. சகோதரின் சொல் தாளாமல், மறு பிறவியிலாவது மகப்பேறு பெற, அவன் தன்னிடம் உள்ளசொத்துக்கள் அனைத்தையும் தன் தத்துப் பிள்ளைக்கு உரிமையாக்கி தவம் செய்ய கானகம்சென்றான்.

தனபதி இல்லாததால் அவனுடைய பங்காளிகள் சொத்துக்கள் அனைத்தையும் பறித்துக்கொண்டனர். செய்வதறியாது தனபதியின் தங்கை சோமசுந்தர கடவுளை வணங்கி தன்நிலையைக் கூறி தனக்கு யாருமில்லாத்தால் ஐயனே கதியென தஞ்சமடைந்தாள்.

வருத்தத்துடன் உறங்கிய தங்கையின் கனவில் ஓர் அந்தணனாக தோன்றிய ஐயன் மறு தினம்அவளது பங்காளிகளை தரும சபைக்கு அழைத்து வந்தால் அறிவில் சிறந்த பெரியோர்கள் அந்தபொய் வழக்கினை தீர்த்து அவளது சொத்துக்களை மீட்டு தருவதாக கூறிய-ருளினார். மறு நாள்பங்காளிகளை தருமசபைக்கு அழைக்க, அவர்கள் அவளை தகாத முறையில் பேசிகொடுமைப் படுத்தினர்.

தரும சபையில் நடந்த வற்றை தனபதியின் சகோதரி கூற, ஏவலாளர்கள் மூலம் பங்காளர்கள்அழைத்து வரப்பட்டார்கள். அச்சமயம் சிவபெருமான் வணிகன் வேடன் பூண்டு அங்கு வந்தார். அந்த சபையில் தர்மம் இல்லையோ, செங்கோல் ஆட்சி கொடுங்கோல்லாக மாறிற்றோ என்ற கேள்விகளை எழுப்பினார். பின் தனபதி தன் தங்கையையும் மருமகனையும் தேற்றினார். பங்காளிகளுடன் இட்ட வழக்கில் தருமசபை மன்றத்தாரிடம் நியாயம் கேட்டார்.

மன்றத்தார் இரு தரப்பினரது வழக்கையும் ஆராய்ந்து பங்காளிகளின் வழக்கு பொய் வழக்கு எனக் கூறினர் இதனைக் கேட்ட பங்காளிகள வந்தவன் வணிகன் தனபதி அல்ல என வாதிட்டனர். உடனே சிவபெருமான் குடிப்பெயர், பட்டப்பெயர் வழிவழி வம்சப்பெயர், யாவற்றையும் முறையாக கூற, மன்றத்தார் இவன் தனபதியே என முடிவுக் கூறினார்கள். பயத்தில் பங்காளிகள் ஓடி மறைத்தார்கள். மன்றத்தார் தனபதி சொத்துக்கள் அனைத்தும்மருமகனையேச் சேரும் என தீர்ப்பு கூறினார்கள்.

அனைவரும் காணும் வண்ணம் மாமனாகிய வந்த சோமசுந்தர கடவுள் கோயிலினுள் சென்று மறைந்தார். இச்செய்தியை அறிந்தமன்னன் சுந்தரேசபாதசேகர பாண்டியன் தனபதியின் மருமகனுக்கு பல பரிசுகள் அளித்து மகிழ்ந்தான். சில ஆண்டுகளுக்குப் பிறகுதன் மகன் வரகுண பாண்டியனுக்கு முடிசூட்டிய பின் சிவபதம் அடைந்தான்.

**பல்லவி**

தனத்தை தனபதியும் தத்தெடுத்த மருமகனுக் கீந்து
மகப் பேறு பெற்றிட வேதவமியற்ற மனை நீங்கினான்

**அனுபல்லவி**

தனத்தை சூதாகவே தாயத்தார் பறித்துக் கொள்ள
தங்கையும் மருமகனும் உன்னைச் சரண் அடைந்தனரே

**சரணம்**

தனபதி தங்கையும் உந்தன் சொற்படி கேட்டு
தரும சபை அமைத்து உன்னை நினைத்தாள்
தனபதியாகவே வந்து வழக்குரைத்த பின் மறைந்த
மர்மத்தையறிந்த மன்னனை அடி பணியச் செய்தாய்